**பக்கம்.3**

**கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்.**

**EP No.57/2021**

**In**

**MCOP 341/1999**

**ம.சா.1 – வனத்தாய்**

**நாள்.26.08.2022**

**<u>எதிர் மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

மசாஆ.1 ஆவணத்தில் 3 முதல் 5 மனுதாரர்கள் ஒரு தரப்பினர்கள் அல்ல என்று சொன்னால் சரிதான். மல்லிகா என்பவர் தனக்கு 06.06.1996ல் ஏற்பட்ட சாலை விபத்தினால் ஏற்பட்ட காயத்திற்காக நஷ்டஈடு வேண்டி MCOP 341/1999 தாக்கல் செய்தார் அதில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு தான் மசாஆ.1. மல்லிகாவிற்கு திருமணம் ஆகவில்லை. மல்லிகா தாக்கல் செய்த MCOP 341/1999 அசல் மனுவில் தனக்கு திருமணம் ஆன விபரம் சொல்லியிள்ளார் என்று சொன்னால் சரியல்ல. அசல் மனு நிலுவையில் இருக்கும் பொழுதே மல்லிகா 08.03.2000 அன்று இறந்துவிட்டார். மல்லிகாவின் இறப்பு சான்றிதல், வாரிசு சான்றிதழ் நான் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. மல்லிகாவின் வாரிசு சான்றிதழில் எங்களுடைய பெயர் உள்ளது. மல்லிகாவின் வாரிசு சான்றிதழில் எங்கள் பெயர் இல்லை என்று சொன்னால் சரியல்ல. மல்லிகாவின் வாரிசு சான்றிதழ் இந்த வழக்கில் வேண்டும்மென்றே மறைக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. MCOP 341/1999 அசல் மனுவில் மல்லிகாவிற்கு கணவர் இருப்பதாக மல்லிகா தெரிவித்து இருப்பதால் மல்லிகா இறந்த பிறகு மல்லிகாவின் வாரிசுதாரர்ராக மல்லிகாவின் கணவர் மற்றும் மல்லிகாவின் தாயார் மட்டும் தான் வாரிசுதாரர்கள் என்று சொன்னால் சரியல்ல. காரணம் மல்லிகாவிற்கு திருமணம் ஆகவில்லை. நாங்கள் மல்லிகாவின் சட்டப்படியான வாரிசுதாரர்கள் இல்லை என்று சொன்னால் சரியல்ல. மல்லிகாவின் சட்டப்படியான வாரிசு தாரர்கள் யார், யார் என்று எடுத்துரைக்க ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. மல்லிகாவிற்கு விபத்து திருத்தணி பேருந்துநிலையத்தில் ஏற்பட்டது. மல்லிகா கடைசியாக வாழ்ந்து இறந்தது திருச்சியில் என்று சொன்னால் சரிதான். நாங்கள் பழனி வட்டம் , அமரபூண்டி கிராமத்தில் வசித்து வருகிறோம்.

எங்கள் தாயார் எங்களுடன் அமரபூண்டி கிராமத்தில் தான் வசித்து இறந்தார். மல்லிகா காலமான பிறகு என் தாயார் நாகம்மாள் தன்னை மல்லிகாவின் வாரிசுதாரராக சேர்க்க மனுதாக்கல் செய்து அசல் மனுவில் தன்னை 2ம் மனுதாரராக சேர்த்து கொண்டார். அந்த சமயத்தில் எங்களை மல்லிகாவின் வரிசுதாரராக சேர்க்கவேண்டி எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. மல்லிகாவின் அன்பு, பாராமரிப்பில் நான் இல்லாத காரணத்தினால் எங்களை அப்பொழுது மனுதாரராக சேர்க்க நடவடிக்கை எடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. MCOP 341/1999 அசல் மனுவில் வழங்கப்பட்ட தீர்ப்பானது ஒருதலைபட்ச தீர்ப்பு என்று சொன்னால் சரியல்ல. அசல் மனுவில் 21.07.2008 அன்று தீர்ப்பு வழங்கப்பட்டது. என் தாயார் நாகம்மாள் 18.01.2017 அன்று இறந்துவிட்டார். நாகம்மாள்லின் வாரிசு சான்றிதழாக மசாஆ.13 தாக்கல் செய்துள்ளேன். நாகம்மாள் தந்தையார் பெயர் பழனியப்ப செட்டியார். நாகம்மாள் வாரிசு சான்றிதழ் திருச்சி ஸ்ரீரங்கத்தில் வழங்கப்பட்டது. வாரிசு சான்றிதழில் மல்லாக திருமணம் ஆகாதவர் என்று சொல்லப்பட்டுள்ளது. நாகம்மாள் இறந்த பழனி வட்டத்தில் வாரிசு சான்றிதழ் வாங்காமல் எங்களுக்கு வேண்டிய நபர்களை வைத்து திருச்சிஸ்ரீரங்கத்தில் பெய்யான சான்றிதழ் பெற்றுள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. மசாஆ.13 வழக்கிற்காக பொய்யாக உற்பத்தி செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. மசாஆ.13 ஆவணம் தவறான அதிகார எல்லையில் வாங்கப்பட்டுள்ளதால் மசாஆ.13 எதிர் மனுதாரர்களை கட்டுப்படுத்தாது என்று சொன்னால் சரியல்ல. மசாஆ.13 வைத்துக்கொண்டு மல்லிகாவின் சட்டப்படியான வாரிசு ஆக நாங்கள் வரமுடியாது என்று சொன்னால் சரியல்ல. நாங்கள் மல்லிகாவின் வாரிசு தாரர்கள் என்ற அடிப்படையில் MCOP 341/1999 வழக்கில் வழங்கப்பட்ட தீர்பாணையின் தொகையை பெற இந்திய வாரிசு உரிமை சட்டத்தின் கீழ் மனு தாக்கல் செய்து உத்தரவு எதுவும் பெறவில்லை. நிறைவேற்று மனுவில் பிரிவு 50 CPC யின் கீழ் நாங்கள் மனு தாக்கல் செய்யவில்லை. O 21 R 21,22 CPC யின் படி நோட்டிஸ் எதுவும் அனுப்பவில்லை. இந்திய வாரிசு உரிமை சட்டத்தின் கீழ் உத்தரவு பெறாத காரணத்தினாலும் பிரிவு 50 CPC யின் கீழ் மற்றும் மனு O 21 R 21,22 CPC யின் படி மனு தாக்கல் செய்யதா காரணத்தினால் நிறைவேற்று மனு நிலைக்கதக்கதல்ல என்ற சொன்னால் சரியல்ல.

**<u>மறு விசாரணை இல்லை.</u>**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

P SARAVANAN

Digitally signed by P SARAVANAN
Date: 2022.08.26 18:26:08 +0530

Additional District Judge,

Dindigul.